සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

## அபிவிருத்தி திட்டமிடலின் நுட்பங்கள் (21)

විභාග අංකය
Index No / சுட்டெண்
........................................

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

1. அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சம்பவத்தை வாசித்து SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி அதன் உள்ளார்ந்த பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காணவும்.

சம்பவம் 1: சரத்தின் வியாபார நடவடிக்கை

சரத் தனது சொந்த வியாபாரத்தை கண்டி நகருக்கு அண்மித்த பகுதியில் நடத்தி வருகின்றார். அவர் பிரதானமாக உள்ளூர் கடைகள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்ற. பாரம்பரிய பாணியில் உள்ளூர் பொம்மைகளை உருவாக்கும் இயலாமையில் உள்ளவர்களின் (disable) சங்கம் ஒன்றினை நிர்வகிப்பதோடு அவர்களுக்கு அடிப்படை சம்பளம் மற்றும் பங்குலாபம் என்பன வழங்கிவருகின்றார்.

பொம்மைகள் அனைத்தும் சரத்தின் சொந்த டிசைன்களில் செய்யப்பட்டவை என்பதுடன் பெரும்பாலான சுற்றுலா கடைகளில் உள்ள பொருட்களில் இருந்து மிகவும் வேறுபட்டவையாகும்.

அவரது நேர்த்தியான வடிவமைப்புகள் மற்றும் கடைக்காரர்களிடையே காணப்படும் பிரபலம் என்பன பொம்மலாட்டங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற பொருட்களை தயாரிக்கும் ஒப்பீட்டளவில் பெரிய தொழிற்சாலையை நடத்தி வரும் முஹாந்திரம் என்பவரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

முஹாந்திரம் வடிவமைப்புகள் உள்ளடங்கலாக சரத்தின் நிறுவனத்தை வாங்க முன்மொழிவதுடன், சரத் மற்றும் அவரது ஊழியர்கள் அனைவரும் வந்து முஹாந்திராமின் தொழிற்சாலையில் வேலை செய்யவும் யோசனை முன்வைக்கின்றார். அதற்காக அவர் பெரும் தொகை ஒன்றை வழங்கவும் தயாராகவுள்ளார்.

இப்போது சரத்திற்கு தேவைப்படுவது. தன் தனித்துவத்தை தக்கவைத்துக் கொள்வதா? இல்லையெனில் பாரிய பணத்தொகையும், வேலை உத்திரவாத்தினையும் தரும் பாதுகாப்பினை நாடுவதா என்பது என்று சரத்துக்குத் தெரியவில்லை.

SWOT) பகுப்பாய்வைப் பயன்படுத்தி தற்போதைய நிலைமை குறித்து உடனடியாக முடிவெடுக்க அவர் விரும்புகிறார். (20 புள்ளிகள்)

ஆ) பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான பகுப்பாய்வு நுட்பமாக SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்துவதன் நன்மைகளைப் பற்றி கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

2. அ) உங்கள் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட ஒரு பிரச்சனை தொடர்பாக, பிரச்சினை மர (Problem Tree) நுட்பத்தைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யுங்கள். (10 புள்ளிகள்)

ஆ) நீங்கள் உருவாக்கிய பிரச்சினை மரத்தின் அடிப்படையில் புறநிலை மரத்தை (Objective Tree) உருவாக்கவும். (08 புள்ளிகள்)

இ) மேலே ஆ). இல் கட்டமைக்கப்பட்ட புறநிலை மரத்தின் அடிப்படையில் சிக்கலைத் தீர்க்க மிகவும் பொருத்தமான உத்திகளைக் கண்டறியவும். (07 புள்ளிகள்)

3. அ) தர்க்க பகுப்பாய்வை (Logical Analysis) உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக. (15 புள்ளிகள்)

ஆ) மற்ற பகுப்பாய்வு நுட்பங்களில் இருந்து தர்க்க பகுப்பாய்வு அணுகுமுறையில் உள்ள வேறுபாடுகளை மேலே. 3. அ) கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதிலின் அடிப்படையில் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

4. அ) அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நிதிப் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

ஆ) பின்வரும் நுட்பங்களை வரையறுத்து, செயற்றிட்டமொன்றை தெரிவு செய்வதில் அவை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக.

i. மீளச் செலுத்தும் காலம் (Pay Back Period)

ii. நிகர நிகழ் மதிப்பு (Net Present Value - NPV)

iii. நிழல் விலை (Shadow Price) (5x3 = 15 புள்ளிகள்)

**************